# அமாவாசை பெருவிழா-டிசம்பர்-2019 சாட்சியங்கள்

**1. பாண்டிச்சேரி - மேரி பஸ்லிகா.**



5 மாதங்களுக்கு முன்பு நான் பணியாற்றிய கல்லூரியில், என்னை பணியிலிருந்து நீக்கிவிட்டார்கள். எம்மாவுஸ் ஆன்மிக மையத்திற்கு வந்து மனபாரத்துடன் இறைவனிடம் வேண்டிக் கொண்டேன். இரண்டு மாதத்திற்குள் அரசு கல்லூரியில் எனக்கு வேலை கிடைத்தது. என் ஜெபத்தை ஆசீர்வதித்த இறைவனுக்கு நன்றி!

**2. கடலூர் - அசுந்தா.**

சில தினங்களுக்கு முன்பு சைக்கிள் மோதி கீழே விழுந்து விட்டேன், 2 வாரம் என்னால் நடக்க முடியவில்லை. மருத்துவமனைக்கு அழைத்தார்கள் நான் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையினால் மருத்துவமனைக்கு செல்லவில்லை. தினமும் எம்மாவுஸ் எண்ணெய்யை ஜெபித்து தடவிவந்தேன். குணமானது ஆண்டவருக்கு நன்றி!




**3. விளாங்காட்டூர் - மரியம்மா.**



எனக்கு இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அதிகமாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். 20 நாட்கள் எந்த உணவும் இல்லை. சுயநினைவு இல்லாமல் இருந்தேன். நான் குணமடைய வேண்டுமென்றும், குணமானால் சாட்சி சொல்கின்றேன் என்று என் மகன் எனக்காக இறைவனிடம் வேண்டிக்கொண்டான். பிறகு நான் குணமடைந்து வீட்டிற்கு வந்தேன். என்னை குணமாக்கிய ஆண்டவருக்கு நன்றி

**4. மாதம்பட்டு - அமலதாஸ்.**

கடந்த ஏப்ரல் மாதம் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். மூன்று முறை மயங்கி கீழே விழுந்துவிட்டேன். இருமும்போது இரத்தம் வந்தது. மருத்துவர்கள் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். நான் இறைவனிடம் வேண்டிக் கொண்டேன். ஆபரேஷன் எதுவும் செய்யாமல் என்னை குணமாக்க வேண்டிக்கொண்டேன். 15 நாட்கள் சிகிச்சை அளித்தார்கள். பிறகு பரிசோதனை செய்து பார்த்து ஆபரேஷன் தேவையில்லை என்று கூறிவிட்டார்கள். ஆண்டவருக்கு நன்றி!



**5. கூனங்குறிச்சி - குழந்தை தெரஸ்**



என் உறவினர்கள் 8 பேருக்கு வேலை கிடைக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். அதில் ஒருவருக்கு அரசு வேளாண்துறையில் வேலை கிடைத்துள்ளது. எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**6. முகையூர் - அமுதா**

என் மகளுக்கும் எனக்கும் தோல் அரிப்பு அதிகமாகி இரத்தம் வர ஆரம்பித்தது. என்னால் கை, கால்களை அசைக்க முடியவில்லை. நடக்கவும் முடியவில்லை. பிறகு எம்மாவுஸ் எண்ணெய்யை நம்பிக்கையுடன் ஜெபித்து தடவிவந்தேன். மகளுக்கு வண்டுகடி குணமானது. கை, கால்கள் வலி நீங்கி நானும் நடக்க ஆரம்பித்தேன். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!



''ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே'' என்று அவர் கூறியிருக்கிறார். அவர் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக வாழ்வோரின் கடவுள்'' என்று கூறினார். (மத்.22:32)

**7. சென்னை - விண்ணரசி**

சில நாட்களாக நெஞ்சு வலி அதிகமாக இருந்தது. இரண்டு



வாரங்களுக்கு முன்பு எம்மாவுஸ்க்கு வந்து என் நெஞ்சு வலி நீங்கவும், கடன் தொல்லை நீங்கவும் அருட்தந்தையிடம் ஜெபித்துச் சென்றேன். தினமும் எண்ணெய் தடவி ஜெபித்து வந்தேன். சில தினங்களில் நெஞ்சு வலி குணமானது மற்றும் எனக்கு Loan கிடைத்து கடன் பிரச்சனை தீரவும் இறைவன் வழிக் காட்டினார். ஆண்டவருக்கு நன்றி!

**8. ஆணைவாரி - லூர்துராஜ்**

குக்கர் திறக்கும்போது கொதிக்கும் தண்ணீர் முகத்தில் கொட்டிவிட்டது. பெரியதொரு ஆபத்து எதுவும் நேராமல் என்னை குணமாக்கும் ஆண்டவரே என்று வேண்டிக் கொண்டேன். பெரியகாயம்



எதுவும் ஏற்படவில்லை. சிறிது நாளிலே முழுவதும் குணமானது. ஆண்டவருக்கு நன்றி!

**9. ஆனைவாரி - கருனைமேரி**

சில தினங்களுக்கு



முன்பு மகனின் Certificates காணாமல் போய்விட்டது. இறைவனிடம் வேண்டிக் கொண்டேன். Certificates இல்லையென்றால் வேலையில் சேரமுடியாது. Certificates கிடைத்துவிட்டால் சாட்சி சொல்வதாக வேண்டிக்கொண்டேன். வேண்டிக்கொண்ட 6 தினங்களுக்குள் என் மகனின் Certificates கிடைத்துவிட்டது. ஆண்டவருக்கு நன்றி!

**10. தேவியானந்தல் - முத்தம்மாள்**

என் மகள் மின்சாரத்தில் சிக்கிக்கொண்டாள். அவளை காப்பாற்ற என்னை தவிர வேறு யாரும் அங்கு இல்லை, காப்பாற்ற சென்ற என்னையும் மின்சாரம் தூக்கி வீசியது. என்ன செய்வது என்று தெரியவில்லை. அருகில் இருந்த கட்டையை எடுத்து அடித்தேன்.



மின்சாரத்திலிருந்து விடுப்பட்டாள். ஆனால் மூச்சு, பேச்சு இல்லை. இறைவா என் மகளின் உயிரை காப்பாற்று, உமக்கு சாட்சி சொல்கிறேன் என்று வேண்டிக்கொண்டேன். பிறகு என் மகளுக்கு சுயநினைவு வந்து கண்திறந்தாள். ஆண்டவருக்கு நன்றி!

**11. தேவியானந்தல் - ஜெயமேரி**

என் அப்பாவுக்கு கிட்னி பாதிப்பு ஏற்பட்டு Dialysis சிகிச்சை அளித்து வந்தோம். தீடிரென்று ஒருநாள் மிகவும்



சீரியஸ் ஆகிவிட்டார். மருத்துவமனையில் அனுமதித்தோம். பரிசோதித்த மருத்துவர்கள் உயிர் பிழைப்பது கடினம் என்று கூறிவிட்டார்கள். என் தந்தைக்காக இறைவனிடம் அழுது வேண்டிக் கொண்டேன். சில தினங்களில் ஆபத்தான நிலையை கடந்து, வீட்டிற்கு அழைத்து வந்தோம். எம்மாவுஸ் ஆண்டவருக்கு நன்றி!

**12. அல்லிக்கொண்டாப்பட்டு - ஜூலியட்மேரி**

ஒரு வயதாகும் என் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது. இரவில் குழந்தை பயந்து அடிக்கடி அழுதுக்கொண்டே இருந்தான். பல இடங்களில் கொண்டு சென்றும் குணமாகவில்லை. அதன்பின்பு ஜெபத்தில்



கலந்துக்கொண்டு எம்மாவுஸ் எண்ணெய்யை ஜெபித்து தடவினேன். குழந்தை குணமடைந்தான். ஆண்டவருக்கு நன்றி!

அவர், ''உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து.'' (மத்.22:37)